K & K PRODUCTIONS

# பசியின் கொடுமை



# பசியின் கொடுமை

---:o:---

## கதைச்சுருக்கம்

பிரபல குடும்பஸ்தராகிய லக்ஷிமிமந்திரத்தின் நாயகன் அகால மரணம் அடைகிறார். அவரின் ஓரே மகன் மோகன் என்பவன் மிகவும் சிறியவனாகையால் அக்குடும்பத்தை மேற்பார்வை பார்த்துவந்த காரியஸ்தன் சொத்துக்களை எல்லாம் அபகரித்துக் கொண்டு, அவ்வூரிலேயே ஒருபணக்காரனாகிறான். ஆனால் அவன் ஒருலோபி பணத்தைக்காக்கும் பூதம் மாத்திரம் தான். அநாதரவாய் விடப்பட்ட மோகன் கூலிவேலை செய்யவும், உயர்ந்த நிலையில் வாழ்ந்திருந்த அவன் தாயாரும் பல இடங்களிலும் சென்று வேலை செய்கிறாள். இவ்விதமாக வாழ எண்ணினாலும், பட்டினிப் பிசாசு அவர்களை வாட்டி வதைக்கத் தொடங்குகிறது. அப் "பசியின் கொடுமை" மூலம் அவன் தாயார் பாயும் படுக்கையுமாகிறாள்.

வேறொரு நல்ல குடும்பஸ்தராகிய ஆனந்தபவனத்தின் தலைவர் ஒரு நாள் மோகனை பஸ் ஸ்டாண்டில் சந்திக்க நேரவும், அவன் விபரங்களை அறிந்து அவனைத் தன்னுடன் வீட்டிற்கு அழைத்துச் சென்று வளர்த்து வருகிறார். அவருக்கு வேணு என்று ஒரு மகனும், சரோஜா என்று ஒரு மகளும் இருக்கின்றனர். மோகன் இவர்களுடன் ஒருவனாக இன்பமுடன் வாழ்ந்து வருகிறான். எல்லோரும் பெரியவர்கள் ஆகின்றனர்.

மேற்கூறிய லோபியின் மகள் கமலத்தை வேணுவிற்கு கலியாணம் செய்துவைக்கின்றனர். வேணு தன் தொழிலுக்காக கமலத்தின் தகப்பனாரிடமிருந்து கடன் வாங்கியிருக்கிறான் அதனை தனக்கு அநுகூலமாக உபயோகித்து, அந்த லோபியின் மகனும், அசடனும் அயோக்கியனுமாகிய ராமு என்பவனுக்கு சரோஜாவை கல்யாணம் செய்துவைக்க கமலம் முயற்சி செய்கிறாள் அதன் காரணமாக, சாந்தியும் சமாதானமும் நிலவியிருந்த அந்தவீட்டில், துன்பமும் துயரும் நடமாடத் தொடங்குகிறது. கமலம், வேணுவின் தாயாரையும் சரோஜாவையும்

காரணமின்றித் துன்புறுத்தத் தொடங்குகிருள். வேணுவினல் அவர்களுக்கு கிடைத்துவந்த சுக சௌகர்யங்களை எல்லாம் கமலம் மறுத்து வருகிருள். அத்துடன் வேணுவோடு அடிக்கடி சரோஜாவின் கல்யாணத்தைப் பற்றி நிர்ப்பந்தித்தும் வருகிருள்.

இதன் நடுவில் இயற்கையின் திருவிளையாடலால் சில மாறுதல்கள் உண்டாகின்றன. சரோஜாவும், மோகனும் காதலர்களாகின்றனர். தன்னிலையை நன்குணர்ந்த மோகன் "இக்காதல் வாழ்வில் வெற்றி பெற முடியுமா" என்ற சந்தேகத்தினல், சரோஜாவினிடம் பல தடவை "இந்நிலை நமக்கு ஏற்றதல்ல, உலகம் இதனை பலவகையாலும் எதிர்க்கும், என்று எடுத்துக் கூறியும்" உதாரணமாக "குப்பனின் காதல்" என்ற கதையையும் வாசிக்கச் சொல்லுகிருன். அதனை வாசித்துணர்ந்த சரோஜா தன் மனதை திடப்படுத்தித் கொண்டு "இக்கதையில் வரும், பூங்கொடியைப்போல் நான் ஒரு நாளும் ஆக மாட்டேன்" என்று மோகனிடம் சொல்லுகிருள். இவர்களின் இந்நிலையைத் தெரிந்து கொண்ட வேணு மோகனை வேலையிலிருந்து தள்ளிவிடுகிருன். லோபியின் மகன் ராமுவும் நண்பர்களும், மோகனை அடித்துத் துன்புறுத்தி, குற்றுயிரும் கொலை உயிருமாக எறிந்து விடுகின்றனர். அவனைப்பற்றிய விபரங்கள் ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. கமலத்தின் நிர்ப்பந்தத்தினல் சரோஜாவிற்கும் ராமுவிற்கும் விவாகம் நிச்சயிக்கப்படுகிறது.

பின், பிரிக்கப்பட்ட காதலர்களின் நிலை என்ன என்பதையும், இவர்களைப் பிரித்து, இக்குடும்பத்தை இந்நிலைமைக்கு கொண்டுவந்த கமலத்தின் நிலை என்ன ஆயிற்று என்பதையும், வேணு முதலானவர்களின் நிலைஎன்ன என்பதையும், இதில் வரும் "சுவர்க்க வாசல்" என்ற நாடகத்தின் சிறப்பையும், உள்ளங்கவரும் வெள்ளித்திரையில் கண்டு கொள்க.

---

| | |
|---|---|
| வெளியிடுவோர் | ... கே. & கே. புரொடக்ஷன்ஸ் |
| ஸ்டுடியோ : | ... உதயா, ஆலப்புழை. |
| கதை & ஸினேரியோ | ... கே. & கே. புரொடக்ஷன்ஸ் |
| வசனம் : | ... பா. ஆதிமூலன் |
| பாடல்கள் : | கம்பதாசன்<br>அண்ணல்தங்கோ<br>ஆதிமூலன் |
| பின்னணி சங்கீதம் : | P லீலா<br>ரேவம்மா<br>கானசரஸ்வதி<br>M. S. திரௌபதி<br>A. M. இராஜா<br>V. N. சுந்தரம்<br>சத்தியம் |
| சங்கீத டைரக்ஷன் : | ... P. S. திவாகர் |
| டான்ஸ் டைரக்ஷன் | ... கோபிநாத் |
| டைரக்ஷன் : | ... மோகன் ராவ் |
| ஒளிப்பதிவு : | E. R. கூப்பர் &<br>P. பாலசுப்ரமணியம் |
| ஒலிப்பதிவு : | ... இராஜகோபால், B.A. |
| லாபரெட்டரி : | ... K சுந்தரம் |
| எடிட்டிங் : | ... P. P. வர்க்கீஸ் தம்பதிகள் |
| மேக் அப் : | ... பார்த்தசாரதி (பம்பாய்) |
| ஆர்ட் : | ... A. பாபு |

# நடிகர் நடிகைகள்

| | | |
|---|---|---|
| திக்குறிசி | ... | வேணு |
| பிரேம்நசிர் | ... | மோகன் |
| S. P. பிள்ளை | ... | ராமு |
| நாணுக்குட்டன் | ... | லோபியாகிய பணக்காரன் |
| மாத்தப்பன் | ... | கிட்டு |
| காலாக்கல் குமாரன் | ... | ராமுவின் நண்பன், சொ. நீ |
| தங்கம் | ... | சரோஜா |
| M. S. திரௌபதி | ... | கமலம் |
| பங்கஜம் | ... | சரோஜாவின் தோழி |
| பேபி கிரிஜா | ... | பாலசரோஜா |
| C. R. ராஜகுமாரி<br>மதுராதேவி<br>ரமணி கோபால் | } | டான்ஸ் |

(1)

தொகையறு

மாபெரும் வாழ்வில் வாழ்ந்திருந்த மாமணி வீடிது தானே
தீமைசெய் வறுமை கொடுமையாலந்தோ சிதைந்ததே வாழ்வே

பாட்டு

இன்பம் தரும் கலை பாடி மகிழ்ந்த நல் இன்பவீடிது
முன்னாலே

துன்பம் செய் வறுமைக் கொடுமையின் ஓலம் தொடர்ந்து
கேட்குது இந்நாளே

செல்வங்கள் எல்லாம் செழித்திட வாழ்ந்தருள் சிறந்த
வீடு இதுதானே

கல்வி நிறைந்த காதலன் மகிழ வாழ்ந்தவள் இவள் தானே

வருந்திவாடிடும் ஏழைகட்குணவை வாரிக் கொடுத்தாள்
அந்தோ

உயிரும் கொடுத்தாள் அந்தோ

இடிந்து துடிதுடித்து ஏங்கிருள் அந்தோ இடர்
சேயும் பசியின் கொடுமையாலே

சுவர்களும் அழுவது போலுள அந்தோ தோன்றும்
கறைகள் தானே

இரக்கமாகி இவள் வாழ்க்கையின் துணைவன் இறந்து
போனானிடை நாளினிலே

பரிந்து காப்பதாய்ச் சொல்லிய கொடியவன் பரித்தனன்
சதியால் உடைமை எல்லாம்

வேலை தேடியே போயினள் அந்தோ வேதனை தரும்
பசிப்பிணியாலே

கற்பினைக் காக்க தொழில்களை நீக்கி கலங்குகிறாள்
பசிப்பிணியாலே

வருந்தி வாடிடும் ஏழையாகியே மடிகிறாள்
பசியின் கொடுமையாலே

வையமீதிலே மாந்தரிலெவர்தாம் மடியவில்லை
வருமைப் பிணியாலே

இத்தனை பேர்தம் வாழ்வை இந்நிலையில் இழந்தனர்
பசியின் கொடுமையாலே

வீழ்ந்தனர் பசியின் கொடுமையாலே

மாய்ந்தனர் பசியின் கொடுமையாலே

(அண்ணல் தங்கோ)

## 2

தாயே பாரில் துணை இனியாரே
பாரில் துணை இனியாரே (தாயே)

ஆதரிப்பார் அண்ணன் எனவே நீ
எண்ணியதும் பகற்கனவே (தாயே)

கொஞ்சி அன்பாய் வளர்த்தென்னைக் கரும்
பாலையில் கொடுத்தாயே

அந்தோ நான் படும் துயர மெல்லாம்
வந்து நீ காண்பாயோ

அம்மா எந்தன் எதிர் காலம் இருள்
அடர்ந்து தோன்றுவதாலே (தாயே)

(அண்ணல் தங்கோ)

(3)

நானே கலையில் தேரினேன் நயமாய் கலைகள்
பலவும் உணர்ந்தே — நானே
வாழ்க்கைதரும் போர்தனிலே வெற்றி எனக்கே
காதலனைப்போல அறப்போர் நடத்துவேன்

பாடுவேனே நான்
ஆடுவேனே நான்
நாடுமின்பமே
கூடி மகிழ்வேன் — ஹா ஹா (நானே)

ஆவலின் பயனெல்லாம் நானடைவேன்
அரிய செல்வங்கள் தரும் நலம் பெறுவேன்
மேவிடும் பகை எல்லாம் அழித்திடுவேனே.

இனி நான் பாடுவேன்
மயில் போல் ஆடுவேன்
இன்பம் சுவைப்பேன்
என்றும் மகிழ்வேன் — ஹா ஹா (நானே)

(அண்ணல் தங்கோ)

(4)

## குப்பனின் காதல்

கவி : பூ நிறை மாமரச்சோலை சூழும்!
நீல நிற மலைச் சாரலின்பால்
கண்ணும் கருத்தும் கவர்ந்திழுக்கும்
தெள்ளு நீர் ஓடைசூழ் கிராமம் அங்கே
குப்பனும் சுப்பனும் சேர்ந்து அந்த
குன்றிலிருந்து இறங்கி வந்தார்
வழியிடைத் தோன்றுமோர் அழகியதாம்
ஏழுநிலை கொண்டதோர் மாளிகையில்
குப்பனிடம் கொண்ட காதலினுல்
எப்போதும் பூங்கொடி பார்த்து நிற்பாள்.

பூங்கொடி : "அன்பரே இன்று நீர் இவ்விதமாய்
நண்பரை விட்டுமே வந்த தேனோ"

குப்பன் : "நண்பனும் இன்று ஓர் வேலையாக
சென்றனன் வந்தேன் தனிமையாக"

குப்பன் : "என்ருலும் பூங்கொடி நாம் நினைக்கும்
இன்ப உலக மீதில்லை காண்பாய்
எண்ணி நீ பார்த்திடில் உண்மை தோன்றும்
திண்ணமாய் நம்மிடை காணும் மாற்றம்"

பூங்கொடி : நம்மிரு உள்ளங்கள் ஒன்ருெடொன்ருய்
பின்னிப் பிணைந்தபின் பேசுவானேன்

குப்பன் : "அப்பனும் என்மீதில் ஆசை கொண்டால்
அப்பாவும் அம்மாவும் ஒப்புவாரோ"

பூங்கொடி : "அப்பாவும் அம்மாவும் என்ன சொல்வார்
எப்போதும் என் சுகம் வேண்டி நிற்பார்"

சுப்பன் : குப்பா நீ ஏன் சில நாட்களாக வீணாய்
இப்படி ஏங்கி இருக்கலானாய்
உன் முகவாட்டமே காட்டிடுதே உந்தன்
உள்ளத்தில் உள்ளதோர் துன்பம் தன்னை
உன் முகவாட்டமே காட்டிடுதே"

குப்பன் : "விண்மீதிருந்ததொரு நக்ஷத்திரம்
மண்மீதோர் புன்செடியில் வீழ்ந்ததைப்போல்
ஏழையாம் என் மீதிற் பூங்கொடியாள்
ஏனோ பெருங்காதல் கொண்டுவிட்டாள்"

சுப்பன் : பெறுதற் கரிதான காதல் வாய்ப்பை
சிறுமைக் குணத்தினால் தள்ளல் பாவம்"

பூங்கொடி : வீணாக அஞ்சிடேல் நான் மாலை சூட்டுவேன்
வாணாளெலாம் இனி மகிழ்ந்திடுவோமே"

குப்பன் : "பூங்கொடியே என் மனமாய வீணையில்
ஓங்கிடும் நாதமே நீ இன்று என்னை ஓர்
புதியவனாகச் செய்தாய்"

பூங்கொடி : "ஆடுகள் மேய்த்திட உந்தனுடன்
நானும் வருகிறேன் இன்பமுடன்"

குப்பன் : "கானகத்திலுள்ள கல்லு முள்ளும்
கால்களில் குத்திடும் வேண்டாம் வேண்டாம்"

பூங்கொடி : "மாமணி மண்டபமாமிதனுள் எந்தன்
காதற் கடலும் அடங்காதே"

குப்பன் : "ஆகாது ஆகாது ஆய்ந்திடாமல்
தகாத காரியம் செய்யலாகா"

கவி : கட்டிய மனக்கோட்டைகள் எல்லாம்
இற்றிடிந்தது பூங்கொடி
உன் தன் எண்ணம் அறிந்திடாமலே
உன் திருமணம் உறுதியானதே.

(பா. ஆதிமூலன்)

(5)

மோகன் :

மோகினியே என் மோகினியே
என் ப்ரேம ராகினியே
ஏகாதே, மதுர கானரங்கத்தில்
ஒன்றுவோம் இன்பத்தில் நாம்.

சரோஜா :

மோகனனே என் மோகனனே
என் ஆசை மோகனனே
ஏகாதே, மதுர கானரங்கத்தில்
ஒன்றுவோம் இன்பத்தில் நாம்.

மோகன் :

அன்பேதும் அருளாத செல்வர் தங்கள்
கண்ணில் முள்ளாக இல்லாமல் சென்றே வாழ்வோம்

சரோஜா :

ஒன்றாக வாழ்வோம் மெய் அன்பினால்
உலகம், சரம் வீசும் என்றாலும் வாழ்வோம் நாம்

மோகன் : மோகினியே..............................,...

சரோஜா : மோகனனே.........................................

சரோஜா : அலைமோதும் புயலாகும் வாழ்க்கை இதில்
கலம் ஓட்டிக் கரை காண்போம் மலையாதே நாம்.

மோகன் : நிலைகாணு பலஹீனன் காதலி

சரோஜா : உள்ளம் கலந்தாலே நமக்கே நாம் வன்மையாம்.

இருவரும் : வாழ்விதிலே நம் வாழ்வினிலே
வளமேவும் உலகாள்வோம் காதலிலே
கதிரோடு மலரானேம் காண்போம் நாம் நிலை
இன்பமே.

(கம்பதாஸன்)

6

தூய இருமனம் சிதைந்து போவதுன்
திருவிளையாடலோ தேவா.
காதல் நதியினை வேதனைத் தடையால்
தடுப்பதும் உனக்கழகாமோ (தூய)

ஆசையினால் மனவீதியில் மாளிகை
அமைத்தனனே மனிதன்
இடிந்து வீழ்ந்திட ஏனோ நீயும்
இருந்து மகிழ்ந்தனையோ

வாழ்க்கை எனும் பூங்கா செழிப்பாக
வளர்ந்து பலன் தரவே

ஏக்கமும் துன்பமும் இரங்கலும் தானே
எழில் செயும் எனும் நினைவாமோ

(தூய இருமனம் சிதைந்து போவதுன்
திருவிளையாடலோ தேவா)

(பா. ஆதிமூலன்)

7

தொல்லை தரும் வாழ்வில் ஏங்கியே - நெஞ்சம்
துண்டு துண்டான பின் வாழ்வதேன்
சொல்லை வளர்த்தென்ன பொருளில்லான் - காதல்
கொள்ள நினைப்பதும் மடமைதான்

காதல் புரிவதில் தவறுண்டோ, பேசும்
கைப்பொருளில்லாக் குறையினால்
ஓதிடும் செல்வமும் புகழுமேன் – இரு
உள்ளங்கள் தம்மிலே ஒன்றினால்

வறுமையில் வாடிடும் ஏழை நான் – என்மேல்
மாசற்ற அன்பு நீ கொண்டதேன்
செருக்குள்ள பணக்காரர் சிரித்திட - என்னைத்
தேர்ந்தெடுத்தாய்ப் பெண்மைத்தெய்வமே

காதலும் கற்பும் அறிந்த நல் - இளங்
கன்னியர் உள்ளம் அறிந்திலார்,
நாதன் எனத்தேறும் தலைவனே - பெண்கள்
நாள் தோறும் வழிபடும் தெய்வமாம்.

நாடி நம்முயிரையும் தந்தினி - காதல்
நற் பூங்கொடியை வளர்ப்போமே

ஆடி முறிந்து துவளுதே - தூய
அன்பில் வளர்த்திட்ட பூங்கொடி, பூங்கொடி, பூங்கொடி.

(அண்ணல் தங்கோ)

## 8

அழுவாதே என் செல்வக் கண்ணே - உன்னை என்
உயிர் போல வளர்ப்பேனே பொன்னே.
அலறும் பசியின் கொடுமை - தன்னால்
அன்றோ பிறந்தாய் இம்மண்ணில்

உரியோன் என்று ஒருவன் இல்லாதே - பல
உதிரப்பிழம் பான தேகம்
எறியப்படும் குப்பை மேட்டில் - இதை
அறியாதவர்போல நாட்டில்

நடிக்கும் கயவர் தம் செய்கை - தன்னை
பழிக்குப் பழி வாங்கத் தவறாய்
என்றே நினைத்துக் களித்தே - உன்னை
நன்றாக நான் வளர்ப்பேனே

அழலாமோ என் இன்பக் கனியே - உன்னை
அன்பாய் வளர்ப்பேன் கண்மணியே (அழுவாதே)

(பா. ஆதிமூலன்)

## 9

## சுவர்க்கவாசல் (நாடகம்)

நித்ய சுந்தர சுவர்க்கம் திறந்ததே
உத்தமர் யாவரும் உட்செல்வீரே

பாபியாம் பணக்காரன் சொர்க்கப்படி வருகிறான்
ஊசியின் காதிலே ஒட்டகம் நுழையுமோ

1. சத்திய சந்தன் போல் நம்பநடித்து என்
சொத்தெல்லாம் கொள்ளை கொண்டாய் அல்லவா
பட்டினியால் நானும் கெட்டிடல் கண்டும்
பட்டணிந்தே சுகம் கொண்டாயன்றோ

2. அன்றொரு நாள் பசியின் கொடுமையால்
உன் படி வாசல் காத்துக்கிடந்தனன்
ஐயா ஐயா வென்றழுது அலறினேன்
அன்ன பிச்சைக்குக் கை ஏந்தினேன்ப்ரபோ
மின்னல் இடி ஓசை காட்டி எனைத்தள்ளி
உன் மனை வாசல் ஓங்கி அடைத்தனை

3. உச்சி வெயிலினில் நாவறண்டு நான்
ஓண்டினேன் உன்தன் வாசலில்
இச்சையாய் மதுதன்னை நீயுமே
ஏந்தியே மெத்த மாந்திட்டாய்
பச்சைத் தண்ணியே வேண்டிக் கூவினேன்
பருகவே கொஞ்சம் தாவென்றே
நச்சுப் பாம்பின் மேல் கல்லெறிதல் போல்
நாடிச் சாடிட வில்லையா

4. நாதியில்லாது பாழ் ரோகியாய்த் தளர்ந்து
நாடினேன் உன் மனைவாசல் தன்னை
வேதனை கொண்டு புழுபோல் துடித்துமே
விம்மி அழுதிட்ட வேளையிலே
காதகங்கொண்டு என் மார்பினில் உன் காலால்
கனிவின்றி உதைத்திட்ட கடும் பேயே

5. முந்தி ஒருநாள் நின் வாசலில் பஞ்சையாய்
வந்தேன் ஒரு கந்தை தாவென்றே
பொன் காசு நீட்டி என் கற்பைக் குலைக்கவே
புகுந்தநே நீ அல்லவா.

6. ஆயிரமாயிரம் ஏழைகள் தங்கள்
ரத்தம் கொண்டாய் நீ
பாழும் பணத்தால் பதவியின் பித்தால்
பாவம் செய்தாய் நீ
அன்பின் மயமாம் சுவர்க்க வாசலை
அகன்றே போவாய் நீ
போவாய் போவாய் நரகத்தீயில்
வீழ்ந்தே போவாய் நீ

(கம்பதாசன்)

## 10

நீ சென்று ஓது காற்றே
நேரான காதலுடன் மேவுமவரோடு (நீ சென்று)

தனிமையினாலே நானும்
இதயம் புழுங்கலானேன்
நிதமும் வருந்தினேனே
வழிமேல் விழியை ஏவி

வாழ்வினில் அவரே மனமமர்ந்தாரே
மாலையாய் ஆகுவேன்

தயை செய்து நீ போய் காற்றே
உரை செய் என் துயர மேற்றே

சொல்லாதே பாயும் குளிர்காற்றே
அல்லாரும் பூங்குழல் அவள் வாட, (சொல்)

காற்றே என் துன்பம் ஒன்றும்
சாற்றேல் நீ அங்கு சென்றே
தாங்காதவள் தன் உள்ளம்
ஓங்கும் துயரே கொள்ளும்

நான் அவள் வாழ வேண்டி விழைந்தேன்
அதுவே எனதின்பம்.

சொல்லாதே பாயும் குளிர் காற்றே
சொல்லாதே பாயும் குளிர் காற்றே

(பா. ஆதிமூலன்)

## 11

போயின துன்பங்கள் யாவுமே
ஆயின இன்பங்கள் பாரினில்

தீமை யாவுமே போய் மறைந்ததாலே
என்னாளும் இன்ப மாமே
நிலையாக நாமும் வாழ்வோமே

பிறருக்கு தீங்கு செய்யாதோர்
உலகினில் வாழ்வார் என்னாளும்
உலகினில் வாழ்வார் என்னாளும்

(பா. ஆதிமூலன்)

சுபம்.

---

**DE LUXE PRINTERS,**
**1, Goomes St.,**
**G.T. Madras-1.**

# வருகிறது

## எமது அடுத்த படம்

# B.S. சரோஜா

நடிக்கும்




கே & கே புரொடக்ஷன்ஸாரின்

# தந்தையும் மகனும்

மலையாளம்...... தமிழ்...... தெலுங்கு